

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் உடல்நலக் குறைவால் காலமான நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் அவர்களின் உடல் வைக்கப்பட்டுள்ள தியாகராய நகரிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு திடலிற்கு நேற்று முன்தினம் (16.8.2025) நேரில் சென்று தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரன், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பட்டமரத்தான் கோவில் அருகில் காயாம்புஞ்சை இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### விவசாயிகள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே

# தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாகப் பயிர்க்கடன் வழங்கும் திட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**தருமபுரி, ஆக. 18-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தை துவக்கிவைத்தார். இந்த திட்டமானது நாட்டிற்கே முன்னோடியான திட்டம் ஆகும்.**

2025-26-ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் "தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க் கடன் பெறுவதற்கு தொடர்புடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பித்து, ஒரு வார காலத்திற்குள் அக்கடனைப் பெறும் நடைமுறையே தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நடைமுறையில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, இணையவழியில் (Online) பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் நடைமுறையும், விண்ணப்பித்த அன்றே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க்கடனை நேரடியாக வழங்கும் நடைமுறையும் தருமபுரி மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக (Pilot) செயல்படுத்தப்பட்டு, பின்னர் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும். மேற்கண்ட அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக முதற்கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ, இணைய வழியிலோ தங்களது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கு எண்ணைக் கொண்டு பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் மிக எளிமையான முறை உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நில உடைமை தொடர்பான விவரங்கள் வருவாய்த் துறையிடம் இருந்தும் பயிர்சாகுபடி தொடர்பான விவரங்கள் வேளாண் துறையிடம் இருந்தும் இணைய வழியில் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து, சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு இணைய வழியில் அனுப்பப்படும்.

சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாளர், மத்திய கூட்டுறவு வங்கியின் கள மேலாளர் மற்றும் கிளை மேலாளர் தங்கள் கணினி வழியே விவசாயிகள் குறித்த விவரங்களை சரிபார்த்து கடன் தொகையை அன்றைய தினமே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைப்பர்.

இத்திட்டத்தை துவக்கி வைப்பதன் அடையாளமாக இன்று தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் பாலஜங்கமனஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த 5 விவசாயிகளுக்கு முதல்வர் அவர்களால் வட்டியில்லாத விவசாயக்கடன் வழங்கப்பட்டது.

இத்திட்டம் நடப்பாண்டிலேயே விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இணையவழியில் கடன் பெறும் இத்திட்டம் படிப்படியாக சுயஉதவிக் குழுக்களுக்கான கடன், சிறு, குறு வணிகக்கடன் என பிற வகைக் கடன்களையும் இணைய வழியிலேயே விண்ணப்பித்துப் பெறுமளவிற்கு நடப்பாண்டிலேயே விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் 1989-ஆம் ஆண்டு தருமபுரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1908 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 117 வருடங்களாக செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதைத்தொடர்ந்து, இன்றையதினம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டது சிறப்புக்குரியது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேசன், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர் திரு.க.நந்தகுமார், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ. சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி' என

# தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை இழந்து விட்டோம்!

## திராவிட இயக்க எழுத்தாளர் திருவாரூர் அர.திருவிடம் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 18-

திராவிட இயக்க எழுத்தாளரும் தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளருமான திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

"திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணியெனத் தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம்!" என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

'திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச் செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தந்தை பெரியாரின் பெருந்தொண்டராக விளங்கிய திருவாரூர் தண்டவாளம் அரங்கராஜ் அவர்களின் புதல்வரும், திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச்செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்கள் மறைந்தார் என்று அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

அர. திருவிடம் அவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை அனைவரிடத்திலும் கொண்டு சேர்க்க 1972 ஜூன் முதல் வார இதழாக வெளிவந்த 'திருவிடம்' எனும் இதழைத்



தொடங்கி நடத்தி வந்தார். திராவிட இயக்க முன்னோடி களின் படங்களை முகப்பில் ஏந்தி, பல முன்னணி திராவிட அறிஞர்களின் படைப்புகளையும், பகுத்தறிவுப் புதையலான கட்டுரைகளையும் கொண்டு இது வெளியாகி வந்தது.

கலைஞரின் காலடிச் சுவடுகள். கலைஞர் 100: சகாப்தமும் சாமான்யனும், காந்தி - கோட்சே, தி.மு.க. பெற்ற வெற்றிகளும் வீரத்தழும்புகளும், திராவிடப் புதையல், தூக்கு வேண்டாம் துப்பாக்கியால் சுடு என எண்ணற்ற நூல்களைத் தொடர்ந்து எழுதி வந்து அறிவுப் பங்களிப்பினைச் செய்து வந்தவர் அர. திருவிடம் அவர்கள்.

அர. திருவிடம் அவர்கள் எழுதி சீதை பதிப்பகத்தின் வெளியீடாக வந்த 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' எனும் முக்கிய வரலாற்று நூலினை 2019 ஆம் ஆண்டு கழக இளைஞரணிச் செயலாளர் இன்றைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டிருந்தார் என்பதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

அர. திருவிடம் அவர்களின் செறிவான பங்களிப்புகளுக்கு அங்கீகாரமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் சிறப்பு நேர்வாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் 'இலக்கிய மாமணி' விருது இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

குடும்பம் குடும்பமாக, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக இயக்கம் வளர்க்கும் திராவிட இயக்கத்தின் மரபில், தனது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி எனத் தனி மனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம். ஆற்றல்மிகு கொள்கைப் பிடிப்பாளரான அர. திருவிடம் அவர்களின் மறைவு தமிழ்ச் சமூகத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் மிகப் பெரும் இழப்பு.

அவர் மறைந்தாலும் அவரது படைப்புகளும் பணியும் திராவிட இயக்கத்தின் தொண்டினையும் வீரமிகு வரலாற்றையும் அடுத்த தலைமுறை இளைஞர்களுக்குத் தொடர்ந்து கொண்டு சேர்க்கும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், திராவிட இயக்க அறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்

# திருவாரூர் அர.திருவிடம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஆக. 18-

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர் திருவாரூர் அர.திருவிடம் அவர்கள், நேற்று முன்தினம் (16.8.2025 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 81.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவிடம் அவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளராக இருந்து வந்த திருவாரூர் அர.திருவிடம் அவர்கள் மறைவுற்றார்.

1972 ஆம் ஆண்டு 'திருவிடம்' என்ற இதழினைத் தொடங்கி திராவிட இயக்கத்தின் கொள்கைகள், சுயமரியாதைச் சிந்தனைகள் பற்றியும், தந்தை பெரியாரின் கருத்துக்களை முதன்மைப் படுத்தியும் மரபுப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாக வெளியிட்டுவந்த சிறப்புக்குரியவர், திருவிடம் அவர்கள்.

இவர் இயற்றிய "திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை" என 1400 பக்கங்கள் கொண்ட நூலினை கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது பெற்றவர் இவர்.

"இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்", "திமுக பெற்ற வெற்றிகளும் வீரத்தழும்புகளும்" என்பன உள்ளிட்ட பல்வேறு நூல்களையும் எழுதியவர் இவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

கழகத்தின் மீது அவர் கொண்ட பற்று, தமிழ் இலக்கிய ஆளுமை, எழுத்துத் திறன் கண்டு, அவருக்கு "கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்" பொறுப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது முதல், இதுவரை, தமது 81வது வயதிலும் தீவிர கழகப் பணியாற்றி வந்தார். திருவிடம் அவர்கள். அவரது மறைவு, கழகத்திற்கு இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (17.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) திருவாரூர், EB காலனியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சிதம்பரவிடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், கூட்டுறவு சரக துணைப்பதிவாளர் (அறந்தாங்கி) திருமதி.மணிமேகலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.